# தோற் பொருள் உற்பத்தி

நிர்மலி செனெவிரத்ன

ஒரு நாட்டில் காணப்படும் கால்நடைகளின் எண்ணிக்கையிலேயே தோற் தொழில் துறையின் சகல அம்சங்களும் முழுமையாகத் தங்கியிருக்கின்றது. பண்ணைத் தொழில், இறைச்சி உற்பத்தித் துறைக் கைத்தொழில் என்பவற்றின் உப உற்பத்தி என்றே இதை ஏறத்தாழக் குறிப்பிடலாம். மேலும், தோல் உற்பத்தியிலும், அது எந்த அளவிற்குக் கிடைக்கின்றது என்பதிலுமே இக்கைத்தொழில் முற்று முழுதாகத் தங்கியிருப்பதால் கால் நடைகளின் தொகை, அவை கொலை செய்யப்படும் வீதம் என்பவற்றின் மீது செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் இக்கைத்தொழிலில் நேரடியான பிரதிபலிப்பை ஏற்படுத்துகின்றன. உதாரணமாக, இலங்கையில் அண்மைக் காலத்தில் கால் நடைகளின் தொகையில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. அத்துடன் கால் நடைகள் கொலை செய்யப்படும் வீதமும் அதிகரித்துச் செல்லும் போக்கைக் கொண்டிருந்த போதிலும் தோல் வழங்கல் கோலங்களில் வரவேற்கத் தக்க மாற்றங்களெதுவும் தென்படவில்லை. எப்படியிருப்பினும் வழங்கல் குறைவாக இருக்கின்றது என்பதைக் காரணமாகக் காட்டுவதை விட, நமது மூலப் பொருள்களின் குறைந்த தரமே இந்நிலைக்கு ஓரளவிற்கேனும் காரணமாகின்றதென்று கூறுவது பொருந்தும்.

## பயன்படுத்தப்படாமை

இது தவிர, இறக்குமதி செய்யப்படும் தோல்களின் விலை மிக உயர்வாக இருப்பதால், இறக்குமதி மூலம் இம்மூலப் பொருட்களைப் பெறுதல் விரும்பத்தக்க தொன்றல்ல. இலங்கையில், தோல்கள் ஒரு வரையறைக்குட்பட்டே கிடைத்த போதிலும் தோற் கைத்தொழிற் துறை இவற்றை முழு அளவில் பயன்படுத்தவில்லை. கணிசமான அளவு தோல் ஏற்றுமதி செய்யப்படுவதே இதற்குக் காரணமாகும். எனவே, தோற் பொருட் கைத்தொழிலை முன்னேற்றுவதற்குரிய உள்ளார்ந்த ஆற்றல் வளங்கள் இலங்கையில் உண்டு. இலங்கையிலுள்ள ஏறத்தாழ பதினொரு தோற்பதனிடும் ஆலைகளின் முழு உற்பத்தி அளவையும் பயன் படுத்த வேண்டும் என்ற அடிப்படையிலேனும் இதை மேலும் ஆராய வேண்டியது அவசியம்.

## அதிக கேள்வி

இன்று நமது நாட்டிற்குப் பெருமளவில் வருகை தரும் உல்லாசப் பயணிகள் காரணமாக உண்மையான தோலினாலான, காசுப் பைகள், பட்டிகள், பாதணிகள், பாதுகைகள் (Sandals), கைப் பைகள், பயணப் பைகள் போன்றவற்றிற்கு ஏற்பட்டிருக்கும் கேள்வியை அடிப்படையாகக் கொண்டு இத் துறையில் இலாபகரமான கைத் தொழிலை நிறுவ முடியும்.

## பாதணிக் கைத்தொழில்

பாதணிக் கைத்தொழில் மிகச் சிக்கார்ந்த தொன்றாகும். விசேடம் தெரிந்த வட்டாரங்களின் படி பாதணி என்று குறிப்பிடக் கூடிய நியம உற்பத்தி ஒன்றில்லை. எனவே, தோற் கைத் தொழிலைப் போலன்றிப் பாதணிக் கைத்தொழிலை ஒப்பீட்டாய்வுக்குட்படுத்துவது மிகக் கடினமானதோர் விடயம் என்பது உண்மை. இக்கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் அளவிலும் உற்பத்தித் தரத்திலும் பெருமளவில் வேறுபட முடியும். உதாரணமாக, எளிமையான செருப்புக்கள் முதல் கையாலாக்கப்படும் சிறந்த ரக நெடுஞ் சப்பாத்துக்கள் (Boots) வரை உற்பத்தி செய்யும் தனி ஆள் கடை முதல், விலங்குக் கொலைக் களங்கள், தோல் பதனிடு ஆலைகள் போன்றவற்றைத் தனக்கெனச் சொந்தமாகக் கொண்டு ஆயிரக்கணக்கான தொழிலாளர்களை வேலைக்கமர்த்தும் முற்றாக ஒன்றிணைக்கப்பட்ட பாதணித் தொகுதிகள் வரையான வேறுபட்ட நிறுவனங்கள் உண்டு.

எனவே, பாதணிக் கைத் தொழில் சந்தேகத்துக்கிடமின்றிச் சிக்கார்ந்ததொன்றேயாகும். மிகப் பல வகையான எந்திரப் பொறிகள், மூலப் பொருட்கள், செய்கை முறைகள், மோஸ்தர்கள் என்பவற்றைக் கொண்டிருப்பதே இச் சிக்கார்ந்த தன்மைக்குக் காரணமாகும். அத்துடன் இது புவியியற் சக்திகளுக்கும் பண்பாட்டுச் சக்திகளுக்கும் கட்டுப்பட்டன. உதாரணமாக, நீடித்துப் பாவிக்கக் கூடியதும் எளிமை மிக்கதுமான பாதணிகளின் உற்பத்தியே அடிப்படைத் தேவையாக அமைந்திருக்கக் கூடிய அபிவிருத்தியடைந்து வரும் நாடொன்றில்

விற்பனையும் சந்தைப்படுத்தும் பிரச்சினையும், குறிப்பிட்ட தருணத்தில் நிலவும் பாணிகளின் போக்கே பாதணி விற்பனையில் செல்வாக்குச் செலுத்தும் முக்கிய காரணியாக அமையும். செல்வந்த நாடுகளின் பிரச்சினையிலிருந்தும் பெருமளவில் வேறுபடும். அபிவிருத்தியடைந்த நாடுகளிலும் கூட ஒரு நிறுவனத்திற்கும் பிறிதொரு நிறுவனத்திற்குமிடையில் வேறுபாடுகள் நிலவுவதைக் காணலாம்.

உற்பத்தி அளவு எதுவாயிருப்பினும் உற்பத்திக் கட்டங்கள் ஒன்றே. நாளாந்த உபயோகத்திற்கென வாங்கப்படும் சப்பாத்துக்கள் இன்று உள்ளூர்ச் சந்தையில் சுமார் 75 ரூபாவாகவோ அல்லது அதற்கு மேலும் விலை கொண்டதாகவோ இருக்கும் இத்தருணத்தில், பாதணிக் கைத்தொழில் ஒன்றை நிறுவி இலாபகரமாக நடத்த முடியும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. மத்திய கிழக்கில் ஆகக் குறைந்த விலை கொண்ட ஒரு சோடிச் சப்பாத்தின் விலை 250 ரூபாவிற்கும் 300 ரூபாவிற்கும் இடைப்பட்டதாகவிருக்கிறது; தவிரவும், இங்கிலாந்திலும் ஐரோப்பாவிலும் ஓரளவு மலிவான ஒரு சோடிச் சப்பாத்து சுமார் 10 பவுண் விலை கொண்டதாகும். எனவே இச்சந்தைகளை முக்கிய இலக்காகக்கொண்டு சப்பாத்துக்களை உற்பத்தி செய்தால் ஒருவர் திருப்திகரமாகத் தனது கைத்தொழிலை இயக்கலாம்.

அன்றாடப் பாவனைக்குகந்த மலிவான உறுதியான சப்பாத்துக்களையும் பாதுகைகளையும் அணியும் வழக்கத்தை அதிகம் அதிகமானோர் இன்று மேற்கொள்வதால் இத்தகைய பாதணிகளுக்கு மிகப் பெரிய கேள்வியுண்டு. மேலும், மலிவான பாதணிகளை உற்பத்தி செய்வதற்கு மிக உன்னத தரம் வாய்ந்த குரோம் தோல் அவசியமில்லை. 'B' தரத் தோலைப் பயன்படுத்தலாம், 'தாவர' தோலைக் கூடப் பயன்படுத்த முடியும்.

நீண்ட காலப் பாவனைக்குகந்ததும் உறுதி வாய்ந்ததுமான பாதணிகளை உற்பத்தி செய்ய முடியுமேயாயின், அத்துடன் இவை குறிப்பிடத்தக்களவு தரம் வாய்ந்தவையாகவும் அமையுமேயாயின் இப்பொருட்களுக்கான சந்தை மிகவும் திருப்திகரமானதொன்றாய் அமையுமென்று சில வர்த்தகர்கள் அபிப்பிராயப்பட்டனர். இன்று, சாதாரண கிரேஷியன் (கிரேக்க பாணி) செருப்புகளும் கூட விலை மிக்கனவாய்க் காணப்படுவதால் பாதுகைகளுக்கும் செருப்புக்களுக்குமான சந்தையிலும் மேம்பாடேற்பட்டுள்ளது. எனவே, கணிசமான அளவு திறமை வாய்ந்த எந்தவொரு சப்பாத்துத் தைப்பவரும் கூட சந்தைப்படுத்தத் தக்க பாதணிகளை உற்பத்தி செய்யும் நிலையிலிருப்பார். சிக்கனமான பாதணிகள் தவிர கையாலாக்கப்பட்ட தரமான பாதணிகளுக்கு மத்திய கிழக்கிலும் செல்வம் கொழிக்கும் மேற்கு நாடுகளிலும் மிகப் பெரிய கேள்வி உண்டு. நமது உற்பத்திகள் ஏற்கனவே வெளிநாட்டுச் சந்தைகளில் இடம் பிடித்திருப்பதால் ஆர்வமிக்க தொழில் முயற்சியாளர் வெளிநாட்டுச் சந்தையில் தமக்கென ஓரிடத்தைத் தேடிக் கொள்வது கடினமான விடயமல்ல.

## வேறும் உற்பத்திப் பொருட்கள்

பாதணிகள் தவிர பெரும் கேள்வியுள்ள மேலும் பல உற்பத்திப் பொருட்கள் தோலிலிருந்து தயாரிக்கப்படலாம். நமது இன்றைய முழுத் தோற்பொருள் உற்பத்தியில் 30% முதல் 40% வரையான தோற்பொருள் உற்பத்திகள் பாதணிகள் தவிர்ந்த ஏனைய தோற்பொருட்களேயாகும். இன்று தொகுப்புத் தோலும் அதிக விலை கொண்டதாய் உள்ளமையால் உண்மையான தோற்



பொருள்களுக்கான சந்தை மேலும் மேம்பட்டுள்ளது. எனவே, இன்று தோற்பொருட்களுக்கு உள்ளூரில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் பெரும் கிராக்கியுண்டு. நல்ல தரம் வாய்ந்ததொரு பயணப்பை அல்லது ஆவணப்பை ரூபா 150 முதல் ரூபா 200 வரை விலையிடப்பட்டு விற்கப்படுகின்றதெனில், இப்பொருட்கள் இதுபோன்று இரு மடங்கு அல்லது மும்மடங்கு விலைக்கு வெளிநாடுகளில் விற்கப்படுவதில் ஆச்சரியப்படுவதற்கொன்றுமில்லை. துரதிர்ஷ்டவசமாக, இப்பொருட்களைச் சிற்றளவில் உற்பத்தி செய்வதில் ஈடுபட்டிருப்போரில் பலர் உள்ளூர்ச் சந்தையை மனதிற் கொண்டே உற்பத்தி செய்கின்றனர். இதனால் பொருட்களின் தரத்தையிட்டு அதிக சிரத்தை கொள்வதில்லை. இத்தொழில் முயற்சியாளர் வெளிநாட்டுச் சந்தையைத் தமது இலக்காகக் கொண்டு உயர் தரம் கொண்ட பொருட்களை உற்பத்தி செய்வார்களேயாயின் அவர்களை அதிர்ஷ்டம் தேடி வருவது திண்ணம்.

இத்துறையில் வெற்றியுடன் இயங்க வேண்டுமேயாயின், எதிர்காலத் தொழில் முயற்சியாளர் எவராயிருப்பினும் உள்நாட்டு வர்த்தகத்தை மட்டுமே மனதிற் கொள்ளாது வெளிநாட்டு வர்த்தகத்தையும் மனதிற் கொண்டு இயங்குவது அவசியம். இவ்வம்சத்தைப் பொறுத்தளவில் அரசாங்கத் தோற்பொருட் கூட்டுத்தாபனமும் வெற்றி பெறவில்லை என்றே கூறவேண்டியிருக்கிறது. ஏனெனில், வெகு அண்மையில் தான் இந்நிறுவனம் ஏற்றுமதிக்குகந்த தரம் கொண்ட பொருட்களை உற்பத்தி செய்ய ஆரம்பித்துள்ளது. கூட்டுத் தாபனத்தின் ஏற்றுமதிச் சந்தையை விரிவுபடுத்துவதற்கு அர்த்தமுள்ள நடவடிக்கைகள் சில மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும், கூட்டுத்தாபனத்தின் ஏகலயிலுள்ள தொழிற்சாலை, தற்போது, இலாபகரமான ஏற்றுமதிச் சந்தையை விடுத்து உள்ளூர்ச் சந்தையைப் பெருமளவில் மனதிற் கொண்டே இயங்கி வருகிறது. மட்டக்குளியவில் அமைந்துள்ள பாதணித் தொழிற்சாலையும் ஏகலயில் அமைந்துள்ள தோற்பொருட் தொழிற்சாலையும் அரசாங்கக் கட்டளைகளைப் பூர்த்தி செய்வதிலேயே பெரிதும் ஈடுபட்டுள்ளன. மட்டக்குளிய தொழிற்சாலையின் முழு உற்பத்தி அளவில் கணிசமான பகுதி இராணுவம், கடல், ஆகாயப்படைச் சேவைகளுக்கும் பொலிஸ் சேவைக்கும் தேவையான செருப்பு சப்பாத்துக்களையும் மற்றும் பாதணிகளையும் உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்தப்படுகிறது. ஏகல தொழிற்சாலையின் முழு உற்பத்தியளவில் குறிப்பிடத்தக்களவு பகுதி அரசாங்கம் விநியோகிப்பதற்கான ஆவணப்பைகள் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான பட்டிகள், பொதிப் பைகள் போன்றவற்றையும், புகையிரதத் திணைக்களத்தினருக்குத் தேவையான உபகரணங்களையும் உற்பத்தி செய்கிறது. உற்பத்தியைப் பலவகைப்படுத்துதல் பற்றியோ அன்றி ஆராய்ச்சியும் பொருட்களின் அபிவிருத்தியும் பற்றியோ அவற்றிற்கான சந்தைகள் போன்றவை பற்றியோ மிகச் சிறிய அளவிலேயே ஆய்வு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும், ஏற்றுமதிச் சந்தைகள் மிகவும் இலகுவாக அபிவிருத்தி செய்யப்படலாம் என்பதைக் கீழ்வரும் உதாரணம் நிரூபித்து நிற்கிறது. 1964 ஆம் ஆண்டில் இலங்கையிலிருந்து ஐக்கிய அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட தோற் பொருட்களின் பெறுமானம் 12.6 மில்லியன் டொலரா



கும். 1974 ஆம் ஆண்டில் இவ் வேற்றுமதியின் பெறுமானம் 31.1 மில்லியனாக அதிகரித்தது. ஐரோப்பிய பொருளாதாரச் சந்தையின் அங்கத்துவ நாடுகளிலும் வேறு சில ஐரோப்பிய நாடுகளிலும் நமது உற்பத்திப் பொருட்களின் மீது அனுமதிப் பங்குகள் விதிக்கப்பட்டுள்ள போதிலும், குறிப்பாக இத்தாலி, ஸ்பெயின், போர்த்துக்கல் போன்ற நாடுகள் செய்திருப்பது போன்று நாமும் அதி உயர்ந்த தரப் பொருட்களை உற்பத்தி செய்வதில் கருத்தூன்றுவோமேயாயின் இக்கைத்தொழிலை மேலும் அபிவிருத்தி செய்வதற்கான உள்ளார்ந்த ஆற்றல் வளத்தை நாம் கொண்டுள்ளோம் என்பதில் ஐயமில்லை.

## கைப் பைகள், ஆவணப் பைகள்

பயணப் பைகளைப் பொறுத்தளவில் தொழிற்பாட்டுக் காரணிகளே முக்கிய இடத்தைப் பெறுவதனால், இவை சம்பந்தமான பாணிகளும் மோஸ்தர்களும் வரையறைக்குட்பட்டதாகக் காணப்படுகின்றன. எனவே, பிரயாணப் பெட்டிகள் போலன்றி கைப் பைகள், ஆவணப் பைகள் போன்றவற்றிற்கான சந்தை அழகியற் காரணிகளினதும் காலணிகளினதும் மிகக் கடுமையான செல்வாக்கிற்குட்படுகின்றன. தோல் அழகியற் பெறுமானம் மிக்க டாம்பீகப் பொருளாகவே இன்னமும் கருதப்படுவதனால் அதைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் பொருட்கள், பெறுமானம் மிக்கனவாகக் கருதப்பட்டுப் போக்கிஷம் எனப் பேணப்படுகின்றன. எனவே தோற் பொருட்கள் வர்த்தகச் சந்தையில் தொடர்ந்தும் மிக அழுத்தமான பிடி கொண்டுள்ளன. தொகுப்புத் தோற் பொருட்கள் ஒப்பீட்டளவில் இரண்டாவது இடத்தையே வகிக்கின்றன.



## உறுதியான கேள்வி

இங்கும் கூடத் தோற் பொருட்களுக்கு உறுதியான கேள்வி உண்டு. பாதணிகளைப் போன்று இவையும் மிகச் சிறிய அளவிலோ அல்லது பெரு நிறுவனங்களினால் மிகப் பாரிய அளவிலோ உற்பத்தி செய்யப்படலாம். பாதணிகள், பிரயாணப் பைகள் போலன்றி கைப் பைகள், காசுப் பைகள், ஆவணப் பைகள் போன்றவற்றைப் பொறுத்தளவில் கலைத்திறனையும் தரத்தையும் வெளிப்படுத்துவதற்கு அதிக வாய்ப்புண்டு. எனவே, பாவனையாளர்களின் 'நாட்டங்களுக்கிணங்க, மிக வேறுபட்ட கோலங்களைக் கலையார்வம் மிக்க ஒருவர் உருவமைக்க முடியும்.

எனினும், இங்கும் உல்லாசப் பிரயாணிகளும் ஏற்றுமதியுமே இலக்குச் சந்தையாக அமைய வேண்டும். ஏனெனில் இச்சந்தைகள் உண்மையில் பலன் தருவன. ஐரோப்பா, ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா போன்றவற்றில் உயர் ரகத் தோற் பொருட்களை ஒருவர் சொந்தமாக வைத்திருத்தல் நாகரிகம் எனக் கருதப்படுகிறது. குறிப்பாகத் தொகுப்புத் தோற் பொருட்களும் மிகக் கடுமையான போட்டியை எதிர் நோக்குவதால் நமது உற்பத்திகள் சந்தையைப் பிடிப்பதில் சிரமம் எதுவும் இருக்க மாட்டாது.

## அதிக கிராக்கி

இவ்வுற்பத்திப் பொருட்கள் தவிர சுவேட் உற்பத்திகள், கையுறைகள், பட்டிகள் போன்றவற்றிற்கும் அதிக கேள்வியுண்டு. இவற்றைக் குரோம் தோலிலிருந்து உற்பத்தி செய்ய வேண்டியதில்லை. புடைப்பாக்கப்பட்ட தோலும், மரப்பட்டையினால் பதனிடப்பட்ட தோலும் திருப்திகரமாகப் பயன்படுத்தப்படலாம். இத்தாலி, ஸ்பெயின், பிரான்ஸ் ஆகிய நாடுகளின் உற்பத்திகள் சந்தையில் ஆதிக்கம் செலுத்திய போதிலும் கேள்வியைப் பூர்த்தி செய்யும் வகையில் உற்பத்தி செய்ய இந்நாடுகளினால் முடியவில்லை. நமது உற்பத்திச் செலவும், தொழிலாளர்களுக்கான செலவும் மேற்கூறிய நாடுகளில் உள்ளதை விடக் குறைவாக இருப்பதால் நமது உற்பத்திப் பொருட்களைப் போட்டியிடக் கூடிய விலையில் சந்தைப்படுத்தலாம்.

குறிப்பாக, பிரான்ஸ், இத்தாலி, ஸ்பெயின், போர்த்துக்

கல் போன்ற நாடுகளிலிருந்து ஏற்படும் தீவிர போட்டியையும் ஹொங்கொங்கிலிருந்து வரும் மலிவான பொருட்களையும் மனதிற் கொண்டு பார்க்கையில், நம் நாட்டின் உள்ளார்ந்த ஆற்றல் வளம் காணப்பட்ட போதிலும் நமது உற்பத்திப் பொருள்களுக்குச் சந்தைகளை நிறுவிக் கொள்வது அந்தளவுக்குச் சுலபமான காரியமல்ல என்பதையும் நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். தவிரவும், புடைவைக் கைத்தொழில் போன்று, தோற் பொருட்கள் தொடர்பாகவும் அனுமதிப் பங்குகள் விதிக்கப்படும் சாத்தியம் உண்டு. எனினும் பெற்றோலியத்தின் மூலம் வருவாய் பெறும் மத்திய கிழக்குச் சந்தை யாவருக்கும் திறந்தே இருக்கின்றது. அனுமதிப் பங்கு முறை இருந்தாலோ இல்லாவிடிலோ நியாயமான விலை கொண்ட தரமான பொருட்கள் எப்பொழுதுமே சுலபமாக விற்பனையாகும். எனவே, திறமை நிறைந்த தொழில் முயற்சியாளர் எவரும் வெற்றிகரமாக இத்துறையில் ஈடுபட முடியும்.

தோற் பொருட் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கான உள்ளார்ந்த ஆற்றல் வளம் நம்மிடையே பெருமளவில் உண்டென்பது மேற்கூறியவற்றிலிருந்து புலனாகின்றது. மேலும், இக்கைத்தொழில் சிக்கார்ந்த தொன்றாகவும் நன்கு விருத்தியடைந்த தொன்றாகவும் இருப்பினும் அதி சிறப்பான அல்லது செலவு மிக்க முன்னேற்றமடைந்த தொழினுட்பமோ அன்றி அதி சிறப்புத் திறமைகள் வாய்ந்த பணியாளர்களோ இத்துறைக்கு அவசியமில்லை. சார்பளவில் ஊக்கம் மிக்க தொழில் முயற்சியாளர் எவரும் அதிக பிரச்சினை இன்றி இத்துறையில் இறங்கலாம். அதே வேளை, சார்பளவில் பார்க்கும்போது நாம் மூலப் பொருட்களைப் பெருமளவில் கொண்டு விளங்குவதோடு இத்தகைய கைத்தொழில்களில் ஈடுபடுவதற்கான திறமையுள்ளவர்களையும் நாம் பெற்றிருத்தல் நமது அதிஷ்டமே. விஷயம் தெரிந்தவர்களின் அபிப்பிராயப்படி இதற்குப் பெருமளவு மூலதனமும் தேவையில்லை. இலாபகரமானதும் மிகத் திருப்தி தருவதுமான இக்கைத்தொழிலிலீடுபடுவதற்குக் கணிசமான அடிப்படைத் திறமையே தேவைப்படுகிறது.

## உற்பத்திச் செய்கை முறை

தோற் கைப் பைகள், காசுப் பைகள் போன்றவற்றைப் பொறுத்தளவில் கன்று அல்லது குட்டிகளினது தோல் போன்ற தரம் வாய்ந்த தோலைப் பயன்படுத்துவது வழக்கம். எனினும் தாவரப்பட்டையினால் பதப்படுத்தப்பட்ட செம்மறி ஆட்டின் அல்லது ஆட்டின் தோலும் பயன்படுத்தப்படலாம். அதி உயர்ந்த தரம் கொண்ட பொருட்களை உற்பத்தி செய்யுமிடத்து மட்டுமே பல்வேறு தரம் வாய்ந்த பிரத்தியேகமான தோல்கள் பயன்படுத்தப்படல் வேண்டும்.

இவை தயாரிக்கப்படும் முறை பெண்கள் தமது ஆடைகளைத் தைத்துக் கொள்வதற்கு மாதிரியுருக்களை வரைந்து அவற்றைப் பின்பற்றும் முறையை ஒத்தது. ஒரு பெண், தேவைப்படும் பருமனுக்கும் மாதிரி உருவுக்கும் அமையப் புடைவையை வைத்து மாதிரியுரு வரைதல் போன்று, மாதிரி உரு தோலில் வரையப்படும். இவை வரைந்ததற்கமைய வெட்டப்பட்டுத் தையற் பொறியினால் தைக்கப்படுகின்றன. இறுதியில் தெறிகளும் கொழுக்கிகளும் இணைக்கப்பட்ட பின்னர் அவை மெருகிட்டு மினுக்கப்படுகின்றன.

## உபகரணங்கள்

(i) கையினால் இயக்கப்படும் பட்டி வெட்டும் இயந்திரம்.

(ii) தையற் பொறி (தட்டை அடி) - ஒரு பொறி.

(iii) தையற் பொறி (உருளை அடி) - ஒரு இயந்திரம்.

(iv) கையினால் இயக்கப்படும் புடைப்பாக்கும் பொறி - ஒரு இயந்திரம்.

(v) கருவிகள் உட்பட நானாவித உபகரணங்கள்.

(vi) அலுவலக உபகரணங்கள் - ஒரு தொகை.

(vii) தொழிற்சாலையும் (100 சதுர மீற்றர்), அலுவலகத்திற்கான இடவசதியும்.

*cont.. p 27*

### Utilities

Since the production process is carried out using heavy machinery, three phase power supply is essential. Well water can be used for this industry.

### Employment

A unit of this nature can provide job opportunities to about 09 persons.

### Investment

The total investment on this project that is geared to manufacture about 40,000 engine mounts per year is approximately Rs.4,000,000. The capital investment could be cut down by a substantial amount by obtaining rubber compounds from Rubber Products Development & Services Centre of Industrial Development Board.